DINAKARAN 01 MAY 2010




பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ஈவ்ஸ் ரோச்சர் குழும நிறுவனம் ஈஷா அறக்கட்டளைக்கு ஒரு கோடி மரக்கன்றுகளை வழங்குகிறது. இதற்கான ஒப்பந்தத்தில், ஈவ்ஸ் ரோச்சர் குழும இயக்குனர் ஆரேலியா கேரே, ஈஷா பசுமை கரங்கள் திட்ட இயக்குனர் சேகர் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

## பிரான்ஸ் நிறுவனம்

# ஈஷா அறக்கட்டளைக்கு 1 கோடி மரக்கன்று நன்கொடை

**கோவை, மே 1:** நடப்பாண்டு உலகெங்கும் பல்லுயிர் பெருக்க தாவரங்களுக்கான ஆண்டாக கொண்டாடபடப்படுகிறது. இதனையொட்டி பிரான்ஸ் நாட்டு ஈவ்ஸ் ரோச்சர் குழுமம் கோவை பூண்டி ஈஷா அறக்கட்டளைக்கு 1 கோடி மரங்கன்றுகளை வழங்குகிறது.

பிரான்ஸ் நாட்டை சார்ந்த ஈவ்ஸ் ரோச்சர் குழுமம் பூமியின் நலனுக்காக மரம் நடுங்கள் என்ற திட்டத்தின் கீழ் உலகெங்கிலும் பலநாடுகளில் மரக்கன்றுகளை நட்டுவருகிறது.

கடந்த 2007ம் ஆண்டு இந்நிறுவனம் ஈஷா பசுமை கரங்கள் திட்டத்துக்கு 10 லட்சம் மரக்கன்றுகளை அளித்தது.

ஈஷாவின் பசுமைக்கரங்கள் திட்டத்தின் செயல்பாடுகளில் திருப்தி அடைந்த இந்நிறுவனம் மேலும் 90 லட்சம் மரக்கன்றுகளை அளிக்க முடிவு செய்துள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஈஷா யோக மையத்தில் நேற்று கையெழுத்தானது.

ஈவ்ஸ் ரோச்சர் குழும இயக்குனர் ஆரேலியா கேரே, ஈஷா பசுமை கரங்கள் திட்ட இயக்குனர் சேகர் ஆகியோர் இதில் கையெழுத்திட்டனர்.

இந்த மரக்கன்றுகள் தமிழகம் முழுக்க நட்டு வளர்க்கப்பட உள்ளது. இதற்கென ஈஷா பசுமை கரங்கள் திட்டத்தின் கீழ் தமிழகம் முழுக்க தன்னார்வ தொண்டர்களின் கண்காணிப்பில் அமைக்கப்பட உள்ள சிறப்பு பண்ணைகள் மற்றும் தனியார் இடங்களில் மரக்கன்றுகள் வளர்க்கப்பட உள்ளன. 2014ம் ஆண்டு இறுதிக்குள் இந்த திட்டம் நிறைவடையும். இந்த திட்டத்தை செயல்படுத்த தேவையான நிதி உதவிகளை படிப்படியாக ஈவ்ஸ் ரோச்சர் குழுமம் அளிக்கும். ஈஷா பசுமை திட்டத்தில் இணைந்து பணியாற்ற விரும்பம் உள்ள நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள், தனிநபர்கள் 0422 – 2580186 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

இத்தகவலை ஈஷா அறக்கட்டளை நிர்வாகிகள் தெரிவித்தனர்.